# தீவிர முறையில் வெள்ளாடு வளர்ப்பு - ஒரு வெற்றிக் கதை

முனைவர். ம.அ.வெண்ணிலா, முனைவர்.இரா. தங்கதுரை மற்றும் பா.ச. சண்முகம்

பெரும்பாலான விவசாயிகள் விவசாயத் தொழிலோடு இணைந்த தொழில்களான மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, தேனீ வளர்ப்பு மற்றும் காளான் வளர்ப்பு போன்ற பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். சில விவசாயிகள் விவசாயத்தடன் கூடிய மேற்கூறிய தொழில்களில் ஒன்றோ (அ) ஒன்றுக்கும் மேற்பட்டோ செய்து வருகின்றனர். இதன் மூலம் விவசாயத்தில் இருந்து கிடைக்கும் வருமானத்துடன் நிரந்தரமான ஒரு கூடுதல் வருமானம் கிடைக்கின்றது. இந்த வகையில் ஆடு வளர்ப்பு தொழிலை செய்து வெற்றி கண்ட விவசாயி திரு.இரா. செல்வம் இங்கே தனது அனுபவங்களை பகிர்ந்து கொள்கின்றார். இவர் ஐந்தாம் வருப்பு வரை படித்துள்ளார் ஒரு ஏக்கர் நிலம் வைத்துள்ளார். இவர் வயது 50 வயது ஆகும் இரண்டு மகன்கள் உள்ளனர். இவர் கடந்த 30 வருடங்களாக ஆடு வளர்ப்பு தொழிலை செய்து வருகிறார்.

இவர் மிளகாய், கத்திரி மற்றும் தீவனபுல் வகைகளான கோ 4 கம்பு புல் போன்றவற்றை சாகுபடி செய்கின்றார். குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் இந்த ஆடு வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். கால்நடை துறையின் மூலம் கிடைக்கும் அனைத்து மான்ய திட்டங்களையும் முறையாக பயன்படுத்தி ஆடு வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

**இரகம்** : சேலம் கருப்பு இன ஆடு வளர்த்து வருகிறார்.

**எண்ணிக்கை** : 10+1

கால்நடைத் துறையின் மூலம் புல் வெட்டும் இயந்திரம் 75 சதம் மான்யத்தில் பெற்று தீவன சேதாரமில்லாமல் தீவனத்தை அளித்து வருகின்றனர். குடல்புழு நீக்கம் 3 மாதத்திற்கு ஒரு முறையும் ஆட்டுக்கொல்லி நோய் தடுப்பூசி (PPR) 6 மாதத்திற்கு ஒரு முறையும் செய்கின்றாா். மேலும் ஆடு நன்கு வளர தாது உப்புக் கட்டியும் கொடுக்கின்றாா். இதற்கான மருந்தை கால்நடை துறையின் மூலம் இலவசமாக பெற்றுக் கொள்கிறாா்.

## தீவன மேலாண்மை

பசுந்தீவனத்திற்கு அகத்தி, கோ 4 புல் மற்றும் சீமை வெள்ளரி போன்றவற்றை தனது நிலத்தில் சாகுபடி செய்து கொள்கிறார். உலர் தீவனமாக நிலக்கடலை பொட்டு மற்றும் புண்ணாக்கு போன்றவற்றையும் அளிக்கிறார்.

அடர் தீவனம் கடைகளில் வாங்கி கொள்கிறார். பசுந்திவனம் நாள் ஒன்றுக்கு 7 கிலோவும் உலர் தீவனம் நாள் ஒன்றுக்கு 3 கிலோவும், அடர் திவனம் நாள் ஒன்றுக்கு 200 கிராமும் ஒரு ஆட்டிற்கு கொடுக்கிறாா்.

**வரவு செலவு**

| **விபரம்** | **செலவு (ரூ)** |
|---|---|
| குட்டி | 10+1 |
| தீவனம்<br><br>பசுந்திவனம்<br><br>(நாள் ஒன்றுக்கு 7 கிலோ வீதம் 11 ஆடுகளுக்கு X 30 நாட்களுக்கு<br><br>(7 X11 X 30 = 2310 கிலோவிற்கு X 2 ரூபாய்/ கிலோ வீதம்) X 5 மாதம் | 23100 |
| உலர்திவனம்<br><br>(3 X11 X60=990 கிலோ X 5 ரூபாய்) | 4950 |
| அடர் தீவனம் 200 கிராம்/நாள் ஒன்றுக்கு<br><br>(2.2 கிலோ X150 )=<br><br>மாதம் ரூ.3000 வீதம் X 5 மாதம் | 15000 |
| மொத்த செலவு | 43050 |

**வருமானம்**

| **விபரம்** | **செலவு (ரூ)** |
|---|---|
| ஒரு பெட்டை ஆடு இரண்டு குட்டிகள் ஒரு சினைக்காலத்தில் இடும் 10 X 2 குட்டிகள் | 20 குட்டிகள் |
| 5 மாதத்தில் 15 கிலோ எடையை பெறும் விலை ரூ 5000 / ஆடு வீதம் 20 ஆடுகளுக்கு 20 X5000 | 100000 |
| நிகர வருமானம் 100000-43050 | 56950 |
| இது ஒரு பருவத்திற்கு அதாவது ஐந்து மாதத்தில் அடுத்த இரண்டு மாதம் சினை ஒய்வுறு காலம் மீண்டும் அடுத்த ஐந்து மாதத்தில் =56950 X2 | 113900 |
| மொத்த வருமானம் | 113900 |

எனவே ஒரு வருடத்தில் 10+1 என்ற எண்ணிக்கையில் ஆடு வைத்திருப்பவர் சுமார் ஒரு இலட்சம் வரை வருமானம் பெறலாம். மேலும் குடும்ப உறுப்பினர்களே வேலை செய்வதால் ஆட் செலவு இல்லை. எனவே குறைந்த நிலம் வைத்துள்ள சிறு விவசாயிகள் இந்த தீவிர முறையில் ஆடு வளர்ப்பு தொழிலை செய்து பயனடையலாம்.

முகவரி

திரு. இரா.செல்வம்
த/ பெ. இராஜி (எ) பச்சை
தொட்டம்பட்டி கிராமம்
வேலவள்ளி அஞ்சல்
பாலக்கோடு வட்டம்
தருமபுரி மாவட்டம்
அலைபேசி : 9750602113

